இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**பெர்ணாண்டோ எதிர் உள்ளூராட்சி திணைக்களம், மேல்மாகாணம்**

**RTIC Appeal/03/2017** *(09.05.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

ஆணைக்குழு தலைவர்: திரு.மஹிந்த கம்மம்பில
ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
நீதியரசர். ஏ.டபிள்யு.ஏ.சலாம்
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

மேன்முறையீட்டாளர்: திருமதி. டபிள்யு.எம்.எல்.வி.ஜி. பெர்ணாண்டோ

18/6, கலாநிதி. எச்.ஐ. பெர்ணாண்டோ மாவத்தை, இடம, மொரட்டுவ

பகிரங்க அதிகார சபையை பிரதிநிதித்துவம் செய்தவர்: திருமதி. கயனி ரணசிங்க, தகவல் உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம், மேல்மாகாணம்

மேல்மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் குறித்தளிக்கப்பட்ட அலுவலகரான திருமதி. சந்திரானி சமரக்கோன் குறித்த விசாரணை தினத்தில் தம்மால் வேறு சில பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளமையால் விசாரணைக்கு சமூகமளிக்க முடியாமைக்கு மன்னிக்கும் படி கோரியிருந்தார். இதனையடுத்து பகிரங்க அதிகாரசபையை பிரதிநிதித்துவம் செய்ய அதன் தகவல் உத்தியோகத்தரான திருமதி. கயனி ரணசிங்கவிற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேல்மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திடம் மேன்முறையீட்டாளர் கீழ்வரும் விபரங்களை கோரியிருந்தார்.

- டிசம்பர் 2011- ஜனவரி 2012 மற்றும் டிசம்பர் 2012 காலப்பகுதியில் அவர் வெளிநாட்டில் இருந்தமை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய LDG/2/C/14/4/2012 என்ற கோவையின் 118ஆம் பக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பக்கங்கள்
- குறித்த விடயம் தொடர்பிலான 2011ஆம் ஆண்டின் கோவை
- குறித்த விடயம் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் தீயணைப்பு அலுவலகர்களுக்கான கோவை
- 1/3/10/5(1) என குறிப்பளிக்கப்பட்டு 14.12.2011 என திகதியிடப்பட்டு ஆளுனர் செயலகத்தால் அவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் அதே இலக்க குறிப்புடன் 22.12.2011 அன்று ஆளுனர் செயலகத்தால் மேல்மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த அவரால் அனுப்பப்பட்ட அவரது தனிப்பட்ட விடுமுறைக்கான விண்ணப்ப படிவம்

ஆணைக்குழுவின் முன்னிலையில் இரு தரப்பினரும் கீழ்வரும் விடயங்களுக்கு இணக்கம் வெளியிட்டனர்.

- உள்ளூராட்சி திணைக்களத்தால் கொழும்பு மாநகரசபையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த எந்திரி (திருமதி) எஸ்.டி.என்.பி.என்.பீரிஸின் வெளிநாட்டு விமான பயணங்கள் தொடர்பான விபரங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டு மேல்மாகாண உள்ளூராட்சி சபையால் மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்படும்.

(இக்கோரிக்கையை ஒரு வாரத்திற்குள்ளாகவே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்ப பகிரங்க அதிகாரசபை இணக்கம் வெளியிட்டது).

- 2006ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு மாநகர சபையில் பணியாற்றிய மற்றும் பணிக்கு அமர்த்தப்பட்ட பொறியியலாளர்களின் குடிபெயர்வு தொடர்பான விபரங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டு மேல்மாகாண உள்ளூராட்சி சபையால் மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்படும். (இக்கோரிக்கையை ஒரு வாரத்திற்குள்ளாகவே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்ப பகிரங்க அதிகாரசபை இணக்கம் வெளியிட்டது).
- மேன்முறையீட்டாளர் பகிரங்க அதிகாரசபையினால் அனைத்து விபரங்களும் வழங்கப்பட்டதாக ஏற்றுக்கொண்டார்.
- பிரிவு 16(e) மற்றும் (f) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பில் மேன்முறையீட்டாளருக்கு தடையில்லை

  16(e): ஒரு மாதத்திற்கு குறைவான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்று பரிசீலிக்கப்படாத விடுமுறை விண்ணப்ப கோரிக்கைகள்

  16 (f): தற்போதுவரை முதற்கட்ட விசாரணைகளுக்கு முகம் கொடுக்காத அலுவலகர்கள் அனைவரும் விடுமுறைக்கான அங்கீகாரமில்லாமல் வெளிநாடு செல்லவில்லை என்பதற்கான உறுதி
- உள்ளூராட்சி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் முன்னிலையில் தனிப்பட்ட கோவைகளை பரீட்சிக்க இரு தரப்பினரும் இணக்கம் வெளியிட்டனர்.

தனது கோரிக்கைக்கு பகிரங்க அதிகாரசபை சரியானமுறையில் பதிலளித்ததாக மேன்முறையீட்டாளர் ஏற்றுக்கொண்டார். மேலும் அவர் தகவலறியும் உரிமை சட்டத்தின் ஊடாக வழங்கப்படும் சேவையை பாராட்டியதுடன் அவருக்கு வழங்கப்பட்ட தீர்வு தொடர்பிலும் திருப்தியை வெளியிட்டார். அத்துடன் சாதாரண குடிமக்கள் தமக்கு தேவையான தகவலை பெற்றுக்கொள்ள தகவலறியும் உரிமை சட்டம் மிக முக்கியமானது எனவும் மேன்முறையீட்டாளர் குறிப்பிட்டார்.

இத்துடன் இம்மேன்முறையீடு நிறைவடைந்தது.